# காஞ்சிபுரம் பெருநகராட்சி

## கூட்ட எண்.6/2020-21

2020-ம் ஆண்டு **ஜூலை** மாதம் **14-ம் தேதி செவ்வாய் கிழமை காலை** **11.00** மணிக்கு நடந்த அவசரக் கூட்டத்தின் நடவடிக்கைகள்.

**முன்னிலை**
**திருமதி.ரா.மகேஸ்வரி, பி.காம்.,**
**தனி அலுவலர்**

**1.** தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம் **2020–21**–ன்கீழ் ரூ.**649.50** லட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டு திட்ட மானிய நிதி (TUFIDCO) ரூ.487.125 இலட்சமும், மற்றும் நகராட்சி பங்களிப்புத் தொகை ரூ.**162.375** ஆக மொத்தம் ரூ.**649.50** இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து வரபெற்றுள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–**28**, அவர்களின் கடிதம் ந.க.எண்.17349/2019/இ3 நாள். **14.07.2020**–ன்படி கீழ்கண்ட விவரப்படி தேர்வு செய்யப்பட்ட பணிகளுக்கு (4 சிப்பங்கள்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| **சிப்பம் எண்** | **பணியின் விபரம்** | **நீளம் (கி.மீ)** | **மதிப்பீடு ரூ. (இலட்சத்தில்)** |
|---|---|---|---|
| சிப்பம் I | வார்டு எண்.46 தாண்டவராயன் நகர், வார்டு எண்.46 சின்னயன்குளம், வார்டு எண்.46 அண்ணா குடியிருப்பு, வார்டு எண்.47 ஓரிக்கை மெயின் ரோடு பின் தெரு, வார்டு எண்.47 குபேரன் நகர், தனசேகரர் தெரு, ஓரிக்கை சிவபுரம், வார்டு எண்.47 வேளிங்கப்பட்டரை அரசமர தெரு, வார்டு எண்.42 விஷ்ணு நகர், வார்டு எண்.42 முத்தாலம்மன் நகர் வார்டு எண்.32 எம்.எம்.அவென்யூ சாலை முதல் ஏ.கே.ஜி திருமண மண்டபம் வரை ஆகிய பகுதியில் தார் சாலை அமைத்தல். | 3.078 | 200.00 |
| சிப்பம் II | வார்டு எண்.24, ரெட்டிப்பேட்டை, வார்டு எண்.41 T.V இரத்தினம் நகர், வார்டு எண்.43 வாழமுனுசாமி தெரு, வார்டு எண்.27 அருந்ததிபாளையம், வார்டு எண்.43 திருவள்ளுவர் நகர், வார்டு எண்.41 இராஜிவ் காந்தி நகர், வார்டு எண்.41 பெரியார் நகர் கோவிந்தராஜன் தெரு, வார்டு எண்.41 நத்தப்பேட்டை முருகன் நகர், | 3.460 | 200.00 |

| | | | |
|---|---|---|---|
| | வார்டு எண்.41 நத்தப்பேட்டை குமரன் நகர், வார்டு எண்.41 நத்தபேட்டை மாரியம்மன் கோயில் தெரு, வார்டு எண்.41 ஆண்டாள் நகர் மற்றும் கற்பகம் அவென்யூ, வார்டு எண்.41 நத்தப்பேட்டை கலால் ஆபிஸ் முதல் மகாலிங்கம் நகர் வரை பகுதிகளில் தார் சாலை அமைத்தல். | | |
| சிப்பம் III | வார்டு எண்.3 லிங்கப்பன் தெரு, ஏகாம்பரபுரம் தெரு வார்டு எண்.3, சர்வதீர்த்த தென்கரை தெரு வார்டு எண்.3, மதுராந்தோட்டம் தெரு வார்டு எண்.21, ராகவேந்திரா நகர் வார்டு எண்.51, வள்ளளார் நகர் வார்டு எண்.51, திருப்பூர் குமரன் சாலை வார்டு எண்.51, செவிலிமேடு மருத்துவமனை ரோடு வார்டு எண்.50, பள்ளிக்கூடத்தன் தெரு வார்டு எண்.50, எஸ்.பி. அலுவலகம் ரோடு வார்டு எண்.48, சின்னய்யன் நகர் வார்டு எண்.49, வரதப்பன் பின் தெரு வார்டு எண்.1, உப்பேரிகுளம் தெரு வார்டு எண்.13, அங்காளம்மன் கோயில் தெரு வார்டு எண்.4 ஆகிய பகுதியில் தார் சாலை அமைத்தல். | 4.240 | 200.00 |
| சிப்பம் **IV** | வார்டு எண்.21 அண்ணா பேருந்து நிலைய உட்புறம், வெளிபுறம் செல்லும் சாலை மற்றும் பேருந்துகள் நிற்கும் பகுதிகளில் தார் சாலை அமைத்தல். | 0.456 | 49.50 |
| | மொத்தம் | **11.234** | **649.50** |

**அலுவலக குறிப்பு** :-

மன்றம் அனுமதி வழங்கலாம். ( **ந.க.எண்.5071/2020 )**

தீர்மானம் எண்.**78** அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது

2. காஞ்சிபுரம் பெருநகராட்சிக்குட்பட்ட பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2019-20-ன் கீழ் கீழ்குறிப்பிட்டுள்ள பணிக்கு மாவட்ட ஆட்சியர், காஞ்சிபுரம் அவர்களின் செயல்முறை உத்திரவு கடிதம் ந.க.எண்.3417/2019/அ3 நாள்.05.06.2020-ல் நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டு உள்ளது.

| **வ.எண்** | **பணியின் விவரம்** | **மதிப்பீட்டுத் தொகை(ரூ.பாயில்)** |
|---|---|---|
| 1 | Construction of bus shelter of Aringnar Anna bus stand Kancheepuram Municipality area in ward no.21 | 35,86,000/- |

எனவே மேற்படி பணிக்கு தொழில்நுட்ப அனுமதி பெறவேண்டி கருத்துருவினை மண்டல செயற் பொறியாளர் செங்கல்பட்டு மண்டலம், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம், மேற்கு தாம்பரம் அவர்களுக்கு அனுப்பி நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.8493/2019/இ1)

தீர்மானம் எண்.79 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.

**3.** காஞ்சிபுரம் நகராட்சிக்குட்பட்ட இராஜாஜி மார்கெட் அனைத்து வியாபாரிகள் சங்கம், மேற்படி இராஜாஜி மார்கெட்டின் பழைய கட்டிடத்தினை அகற்றிவிட்டு புதியதாக புணரமைப்பு பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அறிந்து, இந்த ராஜாஜி மார்கெட்டினை புதியதாக புணரமைப்பு பணிகள் மேற்கொள்வது சம்மந்தமாக தங்களை அழைத்து பேசி தங்களது குறைகளை கேட்டு அதன்பேரில் முடிவெடுக்கப்பட வேண்டும் என தெரிவித்து நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதி மன்றத்தின் வழக்கு (W.P.No.8644/2020)-ல் மாவட்ட ஆட்சியர், காஞ்சிபுரம் முதல் பிரதி வாதியாகவும், ஆணையர், காஞ்சிபுரம் நகராட்சி இரண்டாவது பிரதி வாதியாகவும் இணைத்து வழக்கு தொடரப்பட்டு உள்ளது.

இவ்வழக்கிற்கு திரு-V.ஜெயப்பிரகாஷ் நாராயணன், அரசு வழக்கறிஞர் ஆஜராகி உள்ளதாகவும், இவ்வழக்கிற்கு வக்காளத்து தாக்கள் செய்யக் கோரியும், இவ்வழக்கிற்கான வழக்கு கட்டணம் ரூ.15,000/- (ரூபாய் பதினைந்தாயிறம் மட்டும்) வழங்கக் கோரி கடிதம் வரப்பட்டு உள்ளது. மேற்படி வழக்கு கட்டணத்தினை வழக்கறிஞருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலககுறிப்பு** :- மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.6434/2020/இ1)

**தீர்மானம் எண் :- 80 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

நகராட்சி அலுவலகம்.
காஞ்சிபுரம்.
நாள்:-14.07.2020

(ஓம்) ரா. மகேஸ்வரி
தனி அலுவலர்,
காஞ்சிபுரம் பெருநகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையர்,
காஞ்சிபுரம் பெருநகராட்சி.